விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 030 வள்ளுவர் ஆண்டு 2056 தை 05 சனிக்கிழமை (18.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சமஷ்டியே தேவை

### ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் சிறீதரன் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துகளை நிலைநாட்ட, சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வொன்றே காலத் தேவையானது எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஐரோப்பிய 15

## 20 சதவீதத்தால் மின் கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் 20 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

இதற்கமைய, நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 20 சதவீதத்தால் மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படும் எனப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வீட்டுப் பிரிவின் கீழ், 0-30க்கு இடைப்பட்ட அலகுக்கான கட்டணம் 6 ரூபாயில் இருந்து 4 ரூபாயாகவும், 31-60க்கு இடையில் 9 ரூபாயிலிருந்து 6 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த மின்சாரக் கட்டண திருத்தத்தின்படி, வீட்டுப் பிரிவிற்கான மின்சாரக் கட்டணம் 20 சதவீதத்தால் குறைவடையும் நிலை 15

## ஈழத்தின் நாடக பேராளுமை

### சண்முகலிங்கம் காலமானார்



15

## பருத்தித்துறை துறைமுகம் உட்பட

# வடக்கை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### யாழில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகம் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கில் மேற்கொள்ளப் படவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் இன்று

(திருகோணமலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று திருகோணமலையில் 15

## தேநீர் அருந்திய குடும்பஸ்தர் மரணம்

### ஊரெழுவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் நண்பகல் வேளை தேநீர் அருந்திக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

ஊரெழு பாரதி வீதியில் இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதில் அதே 02

## பயங்கரவாதச் சட்டத்தை இரத்துச் செய்து கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்குக

### ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக்குழு

(கொழும்பு)

பயங்கரவாதச் சட்டத்தை இரத்துச் செய்து கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக்குழு அநுர அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி அறிக்கையை வெளியிட்டு வைத்து உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பு தூதுக்குழுவின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் 15

## முன்னாள் ஜனாதிபதி கோட்டாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 2 மணிநேரம் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் 2 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

கதிர்காமம் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பில் வாக்குமூலமொன்றை வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்தி 15

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில்

### இன்று தேசிய பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் இன்று தேசிய பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. 06

## கிளீன் ஸ்ரீலங்கா அடுத்த வாரம் சபை விவாதம்

(கொழும்பு)

கிளீன் ஸ்ரீலங்காத் திட்டம் தொடர்பில் அடுத்தவாரம் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்றம் 2025 ஜனவரி 21 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
10 - 03 - 1936



இறப்பு
17 - 01 - 2025

## சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் (ஓதுவார்)

ஏழாலை மேற்கு தம்புவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் (ஓதுவார்) அவர்கள் நேற்று 17.01.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலநாயகி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், சிவபாக்கியம் அவர்களின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உயத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சாந்தலிங்கம் குடும்பத்தினர்

ஏழாலை மேற்கு,
தம்புவத்தை.
077 816 1591
(3056)


மாபெரும் மலிவு விற்பனை

**Buy 01 Get 02 Free**
**B/ white & Filler**

நம்பமுடியாத விலைக் கழிவில்
விற்பனைக்குண்டு....

**075 540 0794**

(C-2074)



## பணி வெற்றிடம்

கிளிநொச்சி நகரில் இயங்கி வரும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு பின்வரும் பணி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. கணக்காளர்
2. காசாளர்
3. கணினி இயக்குனர்

பொருத்தமானவர்கள் தங்களது விண்ணப்பங்களை 0760004903 என்ற Whatsapp இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்

(C-2071)


## தேநீர்...

பகுதியைச்சேர்ந்த ராமதுரை சுரேந்திரன் (வயது-41) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பிலான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7)


## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் பலாலி வீதி ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன்பாக 34 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- இருபதடிப் பாதையுடன்
- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதியில் இருந்து 1 Km தூரம்
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம்

Goldan Real State(pvt) Ltd
Owner and Director
T.Kalaithasan

குரு :
**076 069 1105, 076 298 1105, 077 468 3354**

(3048)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறல் அவசியம் என்பதை அநுரகுமாரவும் ஆதரிக்கவில்லை

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவும் யுத்தகாலத்தில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புக்கூறப்படுதல் அவசியம் என்பதை ஆதரிக்கவில்லை என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தனது வருடாந்த அறிக்கையில் (2025) தெரிவித்துள்ளது.**

HUMAN RIGHTS WATCH

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட வேளை இலங்கையின் அரசியல் பாதை மாறியது.

திஸாநாயக்க அதிகளவு சமத்துவமான பொருளாதார கொள்கைகளை முன்வைத்தார், ஊழலிற்கு எதிராக போராடுவது, பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்பது உட்பட நீண்டகால மனித உரிமை கரிசனைகளிற்கு தீர்வு காண்பதாக உறுதியளித்தார்.

எனினும் முன்னைய இலங்கை அரசாங்கங்கள் போல 1983 முதல் 2009 வரையான காலப்பகுதியில் உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்பதை அவர் ஆதரிக்கவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பேருந்து விபத்து

## ◆ சாரதி உயிரிழப்பு ◆ 13 பேர் காயம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று சீமெந்து ஏற்றிச் சென்ற லொறியுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பதின்மூன்று பேர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சுற்றுலாப் பேருந்தின் சாரதியே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான பேருந்தில் 12 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நால்வர் தங்காலை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மூன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டி ஒருவரும் உள்ளடங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் சிறிதளவு காயமடைந்த சுற்றுலாப் பயணிகள் 9 பேர் பெலியத்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களும் மேலதிக சிகிச்சைகளுக்காக தங்காலை ஆதார வைத்திய சாலைக்கு அழைத்து வரப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த சாரதியின் சடலம் பெலியத்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (நி-6)

# குழந்தைகளிடையே அதிகரிக்கும் தொற்றா நோய்கள்!

## எச்சரிக்கும் மருத்துவர்கள்

(கொழும்பு)

நாட்டிலுள்ள குழந்தைகளிடையே நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், கல்லீரல் நோய்கள் மற்றும் நுரையீரல் நோய்கள் என்பன தற்போது அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவ பீடத்தின் குழந்தை மருத்துவத்துறையின் பேராசிரியர் ருவந்தி பெரேரா தெரிவிக்கையில்,

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும், குழந்தைகள் ஆரோக்கியமான உணவைப் பின்பற்ற ஊக்குவிப்பது அவசியம் என்றும் பேராசிரியர் வலியுறுத்தியுள்ளார். கூடுதலாக குழந்தைகளிடையே மனநிலை தொடர்பான நோய்களும் தொடர்ந்து பதிவாகி வருவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# உதயங்க வீரதுங்க பிணையில் விடுதலை

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நுகேகொடை நீதவானின் உத்தரவுக்கு அமைவாக அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன்படி, 10,000 ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் 2 சரீரப் பிணையில் உதயங்க வீரதுங்க விடுவிக்கப்பட்டுள்ளார்.

அண்டை வீட்டாரை தாக்கிய சம்பவம் தொடர்பில் மிரிஹான பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம், கடந்த 10 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

**வைத்தியம்**

வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(3054)

**கோழி மலிவு விலையில்**

புறொயிலர் இறைச்சி 1Kg - 850/=
முட்டை ரூபா 32/=
நியூ சிற்றி கோழிக்கடை
நாவாந்துறை சந்தை, யாழ்ப்பாணம்.
(3055)

# உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் போராட்டத்தில் குதிப்போம்

## அரசிற்கு அவகாசம் விதித்த தபால் ஊழியர்கள்

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் தொழில் பிரச்சினைகளை தீர்ப்பதில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தாவிடின் போராட்டங்களில் ஈடுபட நேரிடும் என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி எச்சரித்துள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னரும் தமது பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்காவிடின் முன்னறிவிப்பின்றி தொழில் ரீதியாக நடவடிக்கை எடுக்க நேரிடும் என முன்னணியின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

தபால் ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் தபால் தொழிற்சங்கப் பிரதிநிதிகளே ஆரம்ப முன்னோடிகளாக திகழ்வதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அமைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

இதன் காரணமாக தற்போதைய அரசாங்கத்திற்கு முன்னர் சம்பளம் தொடர்பாக வழங்கப்பட்ட முன்மொழிவுகள் இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் அமுல்படுத்தப்படும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் தபால் திணைக்கள ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை எனவும், அந்த வருடத்தின் பின்னர் சம்பளத்துடன் கொடுப்பனவுகள் இணைக்கப்பட்ட போதிலும் தபால் ஊழியர்கள் ஓய்வுபெறும் போது கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறுவதில்லை.

தபால் துறையில் 2,000 அதிகாரிகள் மற்றும் 4,000 இளநிலை பணியாளர்கள் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

தபால் ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதில் சிக்கல் நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2025

## உங்கள் மதிப்பு மரியாதையும் உயரும்



**குருவை இராசி நாதனாகக் கொண்ட மீன இராசி அன்பர்களே!**

இந்த ஆண்டு சிலருக்கு புதிய வீடுகளுக்கு மாறும் சூழ்நிலை உண்டாகும். பணவரவும் திருப்திகரமான நிலையிலேயே இருக்கும். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்களின் ஆழ்ந்த நுண்ணறிவை அனைவரும் பாராட்டுவார்கள். உங்கள் அதிகாரமும், பதவியும் உங்களைப் பலப்படுத்தும். உங்கள் மதிப்பு மரியாதையும் உயரும். செய்தொழிலில் புதிய மாற்றங்களைப் புகுத்துவீர்கள். புதிய கடன்களும் கிடைக்கும். சிந்தனையில் தெளிவும் செயலில் வீரியமும் பெற்று உங்களது செயல்களை நேர்த்தியாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியமும் சிறப்பாகவே தொடரும். வழக்கு விவகாரங்களில் சாதகமான திருப்பங்கள் உண்டாகும்.

**குடும்பம்:** மனதில் காரணமில்லாமல் குடி கொண்டிருந்த குழப்பங்களும் மறையும். உற்றார் உறவினர்கள், நண்பர்கள் உங்களை அனுசரித்து நடந்து கொள்வார்கள். இரண்டுபட்டிருந்த குடும்பம் ஒன்று சேரும். குடும்பச் சூழலில் இன்பகரமான மாற்றங்களைக் காண்பீர்கள். குழந்தை இல்லாமல் தவித்தவர்களுக்கு மழலை பாக்கியமும் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கும்.

**ஆரோக்கியம்:** இராசிநாதன் குருவால் ஆரோக்கியத்தில் மேம்பாடு உண்டாகும். சோம்பல் மறைந்து சுறுசுறுப்பாவீர்கள்.

**பொருளாதாரம்:** நீண்ட நாட்களாக இருந்து வந்த சுணக்க நிலை மாறும். பொருளாதாரத்தில் மேம்படுவீர்கள். புதிய வீடு, மனை, வாகன சேர்க்கை உண்டாகும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** உங்கள் அலுவலகம் தொடர்பான விடயங்களில் முழுமையான திருப்தியைக் காண்பீர்கள். எதிர்பார்த்த இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றை எளிதாகப் பெற்று மகிழ்வீர்கள்.

சக பணியாளர்களின் ஒத்துழைப்பும் உயர் அதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கப்பெற்று மிகுந்த உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். மறைமுக வருமானங்களின் காரணமாக உங்கள் வங்கிக் கணக்கில் சேமிப்பு பெருகும் என்பதுடன் அலுவலகத்தில் உங்கள் செல்வாக்கும் நாளும் உயர்ந்து வரும்.

சொந்த வீடு வாங்க வேண்டும் என்று நீண்டகாலம் திட்டமிட்டு வந்தவர்களின் திட்டம் செயல் வடிவம் பெறும். இதுவரை வேலை தேடி அலைந்தவர்கள் இப்போது ஒரு நல்ல வேலை கிடைக்கப் பெறுவீர்கள். கௌரவப் பதவிகளைப் பெறக்கூடிய நிலை சிலருக்கு உண்டு.

**வியாபாரிகளுக்கு:** முழுமன நிறைவைப் பெறக்கூடிய வகையில் லாபம் கணிசமான அளவுக்கு உயரும். இருப்பினும் வியாபார ஸ்தலத்தில் உங்கள் நேரடிப் பார்வை இருந்து வருவது அவசியம். முடியுமான வரை வாடிக்கையாளர்களைத் திருப்தி செய்வதில் உங்கள் கவனம் இருக்க வேண்டும். இல்லையெனில் போட்டியாளர்களின் பக்கம் உங்கள் வாடிக்கையாளர்களின் பார்வை திரும்பி விட இடமுண்டு.

எனவே தரமான பொருட்களைக் கொள்முதல் செய்வதில் நீங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துவது அவசியம். வாடிக்கையாளர்களிடம் கடன் பாக்கிகள் அதிகமாகாமல் பார்த்துக் கொள்வதும் அவசியம். இல்லையெனில் வசூல் செய்வது கடினம். சிலர் வணிக சங்கங்களில் பொறுப்பான பதவியை ஏற்க நேரும்.

**பெண்களுக்கு:** வேலையின் நிமித்தம் வெவ்வேறு ஊர்களில் இருந்தவர்கள் இப்போது சேர்ந்து வாழும் நிலைமை உருவாகும். திருமணம் தள்ளிப்போய் வந்த சிலருக்கு இப்போது திருமண யோகம் கிட்டும்.

சிலருக்கு மனம் விரும்பிய வரையே மாலையிட்டு மணம் முடிக்கும் வாய்ப்பு அமையும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். திருமணம் போன்ற உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கலந்து மகிழும் வாய்ப்பு உண்டு.

குடும்ப விடயங்களில் அதிக கவனம் செலுத்தி சிறு சச்சரவுகளைச் சமாளித்து அனைவரின் நன்மதிப்பையும் அன்பையும் பெறுவீர்கள். புத்திர வழியில் மகிழ்ச்சியடையும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறும். மறைமுகச் [illegible] தரும்.

**அரசியல்வாதிகளுக்கு:** உங்கள் தன்னலமற்ற உண்மையான தொண்டின் காரணமாக தலைமையின் பாராட்டுகளையும் நன்மதிப்பையும் பெறுவீர்கள். உங்கள் மன உறுதியும் விசுவாசமும் உங்களுக்குப் பொறுப்பான பதவிகளையும் பெற்றுத்தரும். இதன் காரணமாக உங்கள் பொருளாதார அந்தஸ்தையும் உயர்த்திக் கொள்வது சாத்தியமாகும்.

தலைமை மட்டுமல்லாமல் தொண்டர்களும் உங்களை மிகவும் மதிப்பார்கள் என்பதால் நாளுக்கு நாள் உங்கள் செல்வாக்கு உயரக் காண்பீர்கள். உங்கள் மன உறுதியைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

**கலைத்துறையினருக்கு:** புதிய வாய்ப்புகள் எளிதில் கிடைக்கக் கூடிய காலகட்டம் என்பதால் நீங்கள் பெரும் முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லாமலேயே வாய்ப்புகள் தேடி வரும். என்றாலும் சக கலைஞர்களின் போட்டியும் கடுமையாகவே இருக்கக்கூடும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போதும் மிகுந்த எச்சரிக்கையுடன் முழுமையாகப் படித்துப் பார்த்து கையெழுத்திடுவது நல்லது. உங்கள் புகழும் பொருளாதார அந்தஸ்தும் உயரக்கூடிய வாய்ப்புண்டு. எல்லோரிடமும் அனுசரணையாகவும் சுமூகமாகவும் நடந்து கொள்வதன் மூலம் உங்களுக்குரிய வாய்ப்புகளில் சில பிற கலைஞர்களுக்குக் கை நழுவிப் போகாமல் காத்துக் கொள்ள முடியும் என்பது உங்கள் கவனத்தில் இருந்து வருவது அவசியம்.




**மாணவர்களுக்கு:** படிப்பில் மட்டுமில்லாமல் விளையாட்டுப் போட்டிகள் போன்ற பிற துறைகளிலும் நீங்கள் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பலரின் பாராட்டுகளையும் பெறுவீர்கள். சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி பயிலும் வாய்ப்பைப் பெறக்கூடிய நிலை உண்டு. அரசு வழங்கும் கல்விச் சலுகைகள் போன்றவற்றைப் பெற்று மகிழ்வீர்கள்.

நீங்கள் பிறதுறைகளில் ஈடுபாடு கொண்டவர்கள் என்றாலும் இப்போதைக்கு படிப்புக்கு மட்டுமே முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுத்தாக வேண்டும்.

**பூரட்டாதி:** இந்த ஆண்டு நீங்கள் செய்யும் காரியங்களுக்கு இருந்த தடை நீங்கும். எதிர்ப்புகள் விலகும். பணவரத்து கூடும். உத்தியோகம் தொடர்பான கவலைகள் நீங்கும். சக ஊழியர்களிடம் இருந்த கருத்து வேற்றுமை குறையும். எல்லாவற்றிலும் நன்மை உண்டாகும். காரிய தடைகள் நீங்கும்.

**உத்திரட்டாதி:** இந்த ஆண்டு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். வாகனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். மனநிம்மதி கிடைக்கும். காரியவெற்றி உண்டாகும். நீண்ட நாட்களாக நினைத்திருந்த காரியம் வெற்றி அடையும். மேலிடத்திலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். பணவரத்து உண்டாகும். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது. வியாபாரிகளுக்கு காரிய தடை ஏற்படலாம். கவனம் தேவை. காரிய அனுகூலம் உண்டு ஆனால் தாமதப்படும். கடின உழைப்பு காரிய வெற்றியைத் தேடித்தரும். வெளியூர் சென்றுவர நேரிடலாம்.

**ரேவதி:** இந்த ஆண்டு மனதில் கவலை ஏற்பட்டு நீங்கும். எவ்வளவு திறமையுடன் செயற்பட்டாலும் காரிய தடங்கல் ஏற்படும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். சாதகமான பலன்கள் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். புதிய ஓடர்கள் தொடர்பாக அலையும்படி இருந்தாலும் சாதகமாக முடியும். பணவரத்து திருப்தி தரும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று 11 முறை வலம் வரவும். பணப் பிரச்சினை நீங்கும். உறவினர் மற்றும் நண்பர்களுடன் இருந்து வந்த கருத்து வேற்றுமை மறையும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன்.

**அதிஷ்ட எண்கள்:** 1, 3

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பட்ட தகவல்களை பகிர வேண்டாம்!

## குறுஞ்செய்திகள், போலி அழைப்புக்கள் குறித்து எச்சரிக்கை

(கொழும்பு)

**பணம் வழங்குவதாகக் கூறி கையடக்கத் தொலை பேசிகளில் வரும் குறுஞ்செய்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகளைக் கண்டு ஏமாற வேண்டாம் என இலங்கை கணனி அவசர செயற்பாட்டுப் பிரிவு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது குறித்து இலங்கை கணனி அவசர செயற்பாட்டுப் பிரிவின் சிரேஷ்ட பொறியியலாளர் சாருக தமுனுகல கருத்துத் தெரிவிக்கையில் "போலியான தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு பணம் வசூலிப்பவர்கள் குறித்து தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த நாட்களில் பொதுமக்களின் கையடக்கத் தொலை பேசிகளுக்கு போலி செய்திகள் வரக்கூடும். இதன் மூலம் நீங்கள் பரிசுத் தொகையை வென்றதாகக் கூறலாம். பல்வேறு சலுகைகள், வீட்டிலிருந்து வேலை செய்யும் வாய்ப்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் போன்றவற்றைப் பற்றிய செய்திகளை நீங்கள் பெறலாம்.

இதுபோன்ற செய்திகள் மூலம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை அவர்கள் கோரலாம். எனவே பொது மக்கள் தமது தனிப்பட்ட தகவல்களை அவர்களுக்கு வழங்க வேண்டாம்" எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-8)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அநுர அரசைத் தோற்கடிப்போம்

## சஜித் சூளுரை

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அநுர அரசைத் தோற்கடிப்போம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சூளுரைத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார சகல நாடுகளுடனும் இராஜதந்திர உறவுகளைப் பேண வேண்டும். மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்துக்கு எதிர்க்கட்சியும் ஆதரவளிக்கும் ஆனால் தற்போதைய அரசு கூறியதற்கும் செய்வதற்கும் இடையில் கடுமையான முரண்பாடுகள் காணப்படுகின்றன. மின்சாரக் கட்டணம், எண்ணெய் விலை குறைப்பு, எரிபொருள் விலை குறைப்பு, உரமானியம் போன்றவற்றைச் செய்ததாகக் கூறினாலும் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

பெரும் மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசு, அந்த ஆணையை மதித்து, மக்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை வழங்கி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அரசு மக்களுக்கு இந்த பணியை ஆற்றாவிட்டால் எதிர்க்கட்சி மக்களுக்காக முன்நின்று ஜனநாயக கட்டமைப்பில் குரல் எழுப்பும். ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூடியபோது மக்கள் மீதான அரசின் அடக்குமுறைக்கு எதிராக நாம் முன்றிற்க வேண்டும் என ஆலோசிக்கப்பட்டது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். இதனை எதிர்கொள்வதற்கு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை முன்னெடுப்போம்.

இந்தத் தேர்தலில் அநுர அரசைத் தோல்வியடையச் செய்வோம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)


# கேள்வி அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது தனது வடக்கு மிருசுவில் கிளை புதியதாக அமைத்தலுக்கான தகுதி வாய்ந்த கேள்விதாரரிடமிருந்து கேள்விகளை கோருகின்றது.

1. கேள்விதாரர்கள் வலிதான பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம் எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமைப் பணிமனையுடன் (தொலைபேசி இலக்கம் 0212050321) தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை 20.01.2025 திகதி முதல் 29.01.2025 திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 4.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்வி கோரலானது பின்வரும் இருமுறைகள் மூலம் தனித்தனியே கோரப்படுகின்றது.
   அ. பொருட்கள் மற்றும் கூலிகளுடனான கேள்வி கோரல்.
   ஆ. பொருட்கள் தவிர்ந்த கூலிகளுக்கான கேள்வி கோரல்.
   இதில் பொருத்தமான கேள்வி வழுங்கலை சங்க பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும்.
4. கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் ஆங்கில மொழி மூலமான தொகுதியினை தலைமைப் பணிமனை **தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம்** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து 20.01.2025 திகதி முதல் 29.01.2025 வரை காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத பணமாக ரூபா ஆயிரம் (1000.00) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்விகள் யாவும் தலைவர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 30.01.2025 திகதி காலை 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது சங்கத்தின் பெறுகைப் பெட்டியினிலோ இடல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடக்கு மிருசுவில் கிளை இல 12 புதியதாக அமைத்தல் வேலைகளுக்கான கேள்வி கோரல்" என தலைப்பிட்டு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். 30.01.2025 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.
6. தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதி தீர்மானம் ஆகும்.

**தலைவர்,**
**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கொடிகாமம்.**

(சி-2066)


# இராசிபலன்

18.01.2025 தை 05, சனிக்கிழமை சதுர்த்தி காலை 6.48 மணிவரை
பூரம் பிற்பகல் 4.13 மணிவரை சுபநேரம் 3.35-5.05 மணிவரை இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
சந்திராஷ்டமம் - திருவோணம், அவிட்டம்

**வளவன்**


மேஷம்

பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.


மிதுனம்

செயற்பாடுகளில் உற்சாகம் கூடும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.


கடகம்

வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


சிம்மம்

பெரிய மனிதர்கள் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அனுபவத்தின் வாயிலாகப் பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், உடல் நலனில் அக்கறை காட்டும் நாள்.


கன்னி

எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.


துலாம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்ளும் நாள்.


விருச்சிகம்

தன்னம்பிக்கையோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், எடுத்த காரியங்களில் வெற்றி பெற அதிக பிரயாசை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


தனுசு

ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


மகரம்

விட்டுக் கொடுத்து செல்வதால் நன்மையுண்டு, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.


கும்பம்

வாழ்க்கைத் துணை வழியே வரவுகள் வந்து சேரலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மீனம்

உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

அளவுக்கு மீறிய சாமர்த்தியம் முட்டாள்த்தனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பொங்கல் விழா இன்று
## யாழ்.வந்தடைந்த அரச பிரதிநிதிகள்



(யாழ்ப்பாணம்)
யாழ்.தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலிருந்து பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் உள்ளிட்ட அரச தரப்பினர் மற்றும் கலை, கலாசார பண்பாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் விசேட குழுவினர் நேற்று யாழினை வந்தடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து கடுகதி புகையிரதத்தில் நேற்று மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த குறித்த குழுவினரை யாழ். புகையிரத நிலையத்தில், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் வரவேற்றனர்.

தேசிய தைப்பொங்கல் நிகழ்வுகள் இம்முறை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்று கலை நிகழ்வுகள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த தேசிய தைப்பொங்கல் நிகழ்வு புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவை
## தீர்மானங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)
பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவை நடத்தும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தி உரிமையாளர்களுடான கலந்துரையாடலானது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவைகளில் ஏற்படும் தடங்கல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கொழும்புத்துறையிலிருந்து யாழ். நகருக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தியின் நேர ஒழுங்குகள் மருதங்கேணி கட்டைக்காட்டிலிருந்து உடுத்துறை மற்றும் உசன் கெற்பெலி பகுதிகளிலிருந்து சாவகச்சேரி நகருக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்துச் சேவைகள் நேர ஒழுங்குகள் சீர்செய்யப்பட்டுள்ளது.

மேலும் அச்சுவேலி இராச பாதை ஊடாக யாழ்.நகருக்கு வரும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்தில் பாடசாலை மாணவர்களுக்கான இடையூறு ஏற்படாத வகையில் சேவை நடைபெறுவதனை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு உறுதிசெய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் உதவி மாவட்டச் செயலாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் மற்றும் சாலை முகாமையாளர், தனியார் சிற்றூர்தியின் சங்கத் தலைவர் மற்றும் உரிமையாளர்கள், சிறுவர் மேம்பாட்டு மாவட்ட இணைப்பாளர் மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (6-33)



தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமசந்திரனின் 108 ஆவது பிறந்ததினம் நேற்று யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு முன்பாக நெய்விளக்குகள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

# கலா ரசனாவின் 'சங்கமம்'

(யாழ்ப்பாணம்)
லண்டன் கலா ரசனாவின் கலை ஆளுமைச் சங்கமம் நடத்தும் 'சங்கமம்' முன்பனி-2025 நிகழ்வில் இன்று சனிக்கிழமை யாழ்.கலாசார மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு அமெரிக்காவின் நியூஜேர்சி, கலைசுந்திரா பரதநாட்டிய பள்ளியின் இயக்குநர் கலைமகள் சந்திர சேகரம் வழங்கும் 'சங்கமும் சுனாமியும்' ஓரங்க நாட்டிய நாடகம் இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து மாலை 6 மணிக்கு ஸ்ரீமதி பவானி குகப்பிரியாவின் நெறியாள்கையில் கொழும்பு தியாகராஜர் கலைக்கோயில் வழங்கும் 'மனம் சுமந்த வலி' கள் நாட்டிய நிகழ்வும் அரங் கேற்றம் செய்யப்படவுள்ளது. (6-8)

# தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் யாழ்.கிளை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 178 ஆவது இசை ஆராதனை விழா இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இதன்போது மங்கள இசை, இசை ஆராதனை ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (6-8)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)
வர்த்தகர் ஈ.எஸ்.பி நாகரட்ணத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக மூத்தோர் பேரவை நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது நீரிழிவு, இரத்த அழுத்தம், கொலஸ் ரோல் மற்றும் கண்பரிசோதனை ஆகியவை இடம்பெறவுள்ளன.(6-8)

# யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான எளியமுறை யோகா பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்ப் பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக் கலை பேராசிரியர் ஜி.நாகராஜன் வழங்கவுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 076 857 1395 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# மாதகலில் சிறப்பாக இடம்பெற்ற வடமாகாண தைப்பொங்கல் விழா



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண தைப்பொங்கல் விழா நேற்றுக் காலை மாதகல் நுனசை முருகன் ஆலய வளாகத்தில் அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

ஆலய வளாக வயலில் இருந்து சடங்காசார முறைப்படி புதிரெடுத்து அதனை ஆலயத்திற்கு எடுத்து வந்து பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

தொடர்ந்து ஆலய முன்றலில் எடுத்து வந்த நெல்லை உரலில் இடித்து பிடைத்து பின்னர் வடமாகாண ஆளுநர் சம்பிரதாய பூர்வமாக பொங்கலை ஆரம்பித்து வைத்தார். இதன் போது 51 பொங்கல் பானைகளில் பொங்கல் இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து விருந்தினர்கள் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளுடன் அழைத்து வரப்பட்டு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கலையரங்கில் கலைநிகழ்வுகள் இடம்பெற்று கலைமன்றங்களுக்கு இசைக் கருவிகளும் வழங்கி வைக்கப் பட்டது.

தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம் பெற்றது. (6-8)

# நுணாவில் பகுதியில் நகர்ப் பூங்கா திறந்து வைப்பு



(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகரசபையின் நகரப் பூங்கா நேற்று வெள்ளிக்கிழமை பொதுமக்கள் பாவனைக்காக நுணாவில் மத்திப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் கடந்த கால சபையினர் எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக நுணாவிலில் காணி கொள்வனவு செய்யப்பட்டு பல்வேறு நிதி மூலங்கள் ஊடாக சிறிது சிறிதாக மேம்படுத்தப்பட்ட நகரப் பூங்காவே இவ்வாறு நகரசபையினரால் திறந்து வைக்கப்பட்டது. (6-8)

# திருவள்ளுவர் குடியிருப்பில் 24 வீடுகள் கையளிப்பு



(தருமபுரம்)
கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மலையாளபுரம் கிராம சேவகர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட "திருவள்ளுவர் குடியிருப்பு" இந்திய உதவி வீட்டுத்திட்ட மாதிரிக் கிராமம் நேற்று கிராமிய நகர வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் அனுர கருணா திலகவின் தலைமையில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவினால் திறப்பு விழா செய்யப்பட்டு மக்களிடம் 24 வீடுகள் கையளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர், கிராமிய நகர வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் மற்றும் பொது அமைப்புகள் கிராம சேவையாளர் பலரும் கலந்து கொண்டனர். (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தள விமான நிலைய திட்டம் மீள்பரிசோதனையில்

(கொழும்பு)

மத்தள சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை இரண்டு இந்திய - ரஷ்ய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனம் மோசமான காரணங்களுக்காக அமெரிக்காவினால் தற்போது பட்டியலிடப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ருவான் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயம் குறித்த நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவது குறித்து பல கேள்விகளை எழுப்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்நிறுவனத்துடனான இலாபப் பகிர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகள் இலங்கை அரசாங்கத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், இத்திட்டம் குறித்து அமைச்சகம் ஒரு விரிவான மதிப்பாய்வை நடத்தி, அதன் ஆய்வு முடிவுகளை அடுத்தகட்ட நடவடிக்கைக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளது.

அதேவேளை, தற்போது, மத்தள விமான நிலைய நடவடிக்கைகள், விமான நிலையம், விமான சேவைகள் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகின்றன. (நி-6)

## யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கௌரவிப்பு நிகழ்வும்-2025

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

காலம் : 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

தலைமை : திரு.செ.ஜெயக்குமார் அவர்கள்
(தலைவர், யா.மா.பா.உ.கூ.சங்கம்)

**அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

(க.செல்வச்சந்திரன்)
செயலாளர்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(C-2063)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992-இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:O/L,Business
எதிர்பார்ப்பு: தகுந்த பெண், வெளிநாடு
தொ.இ: B/15080

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 8 இல் செவ்
கி.பா:44
உயரம்:5' 6"
தகைமை/தொழில்:A/L,Shop(own)
எதிர்பார்ப்பு: தகுந்த பெண்
தொ.இ: B/15081

பிறப்பு:1990 - இந்து
நட்சத்திரம்: பரணி
கிபா: 32
உயரம் : 6'
தகைமை/தொழில்: BSc,MSc, Assistant manager(pvt)
எதிர்பார்ப்பு : உயர்பதவி, BSc பட்டதாரி
தொ.இ: B/15074

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1974-இந்து
நட்சத்திரம் : திருவாதிரை
கி.பா: 40 7 இல் செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு:தொழில் புரியும் மணமகன்
தொ.இ: G/14694

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா: 38 8 இல் செவ்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: MSc(following), Banker(pvt)
எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கும் ஆண்
தொ.இ: G/14989

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 56
உயரம் :5' 2"
தகைமை/தொழில்:BSc(Agriculture), Assistant Lecturer
எதிர்பார்ப்பு:வெளிநாடு, அரசதொழில்
தொ.இ: G/14990

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 13, அராலி வீதி இரண்டாம் குறுக்குத்தெரு, ஆதன இல 30A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை கணபதியர் முருகேசு 03.04.1940 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுல்தான் மொகிடீன் மொகமட் அபூபக்கர் முகதாவில் 3356ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை சின்னையா செல்லத்துரைக்கும் மற்றும் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் வழங்கியுள்ளார். குறித்த ஆதனத்தை இளையதம்பி சிவலிங்கம் 26.11.1955 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முருகேசு நாகரட்ணம் காராளசிங்கம் முகதாவில் 3322ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை ஆறுமுகம் தியாகராஜா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை ஆறுமுகம் தியாகராஜா 29.12.1962ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் அலி மரிக்கார் மொகமட் சுல்தான் முகதாவில் 4215ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை மொஹிடீன் பிச்சை ஹம்சா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை சின்னையா செல்லத்துரைக்கும் மற்றும் பெண் தெய்வானைப்பிள்ளை 20.04.1965ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் அலி மரிக்கார் மொகமட் சுல்தான் முகதாவில் 4773ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை ஜெனதும்பா (மகள்) சின்னத்தம்பி மீரான் மொகிடீன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை ஜெனதும்பா (மகள்) சின்னத்தம்பி மீரான் மொகிடீன் 02.09.1971 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளை முகதாவில் 10254ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை மொஹிடீன் பிச்சை ஹம்சா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை மொஹிடீன் பிச்சை ஹம்சா 02.12.1973 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் அலி மரிக்கார் மொகமட் சுல்தான் முகதாவில் 6053ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 1 அளவுள்ள ஆதனத்தினை மீராப்பிள்ளை ஹாஜியார் குசைன் முபராக் என்பவருக்கு வழங்கியுள்ளார். குறித்த ஆதனத்தை மீராப்பிள்ளை ஹாஜியார் குசைன் முபராக் 23.06.1979ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் மொகிடீன் மன்சூர் முகதாவில் 1011 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 1 அளவுள்ள ஆதனத்தினை மொகிடீன்பிள்ளை செய்துலாப்தீன் பெண் காமிலாக்கு வழங்கியுள்ளார். குறித்த ஆதனத்தை முகமட் உசைன் ரசீம் காதும் பெண் மசூகாவும் 11.08.2017 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 1763 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 1 அளவுள்ள ஆதனத்தினை றசீம்கான் அர்சத்கானுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை றசீம்கான் அர்சத்கான் 21.11.2020ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ம.அ.வினோறாஜ் முகதாவில் 39ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 1 அளவுள்ள ஆதனத்தினை றசீம்கான் பெண் மசுனா, செய்துல் ஆப்தீன் லுக்மான், செய்துல் ஆப்தீன் ரபீக், செய்துல் ஆப்தீன் கஸ்மிலா என்பவர்களுக்கு வழங்கியுள்ளார். குறித்த ஆதனத்தை ரசீம்கான் பெண் மசூனா, செய்துல் ஆப்தீன் லுக்மான், செய்துல் ஆப்தீன் ரபீக், செய்துல் ஆப்தீன் கஸ்மிலா 21.11.2020ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ம.அ. வினோராஜ் முகதாவில் 40ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு குளி 11 அளவுள்ள ஆதனத்தினை முகைதீன் அப்துலகாதர் ரகுபாபேகம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை முகைதீன் அப்துல்காதர் ரகுபாபேகம் 04.01.2021 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ம.அ வினோறாஜ் முகதாவில் 45ஆம் இலக்க சீதன உறுதி மூலம் நெற்பரப்பு குளி 11 அளவுள்ள ஆதனத்தினை முகைதீன் அப்துல் காதர் சுஜீனா பானு என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவு, கிராம சேவையாளர் பிரிவு ஜே-87 **"உப்புக்குளம்கரை"** நெற்பரப்பு இரண்டு குளி ஒன்று (நெற் பர.2 குளி 1) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எ. லாசரஸ் அவர்களால் 06.11.1972ஆம் திகதி அளந்து விபரித்த 3785ஆம் இலக்க படத்தில் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந. கேதீஸ்வரன் அவர்களால் 11.09.2020ஆம் திகதி 4764ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் துண்டு -1 மற்றும் துண்டு -2 எனக்காட்டப்பட்டுள்ளது. இதன் தற்போதைய மொத்த விஸ்தீரணம் நெற்பரப்பு ஒன்று குளி பதினொன்று தசம் ஏழு நான்கு (நெற்பர .1 குளி 11.74) இதில் துண்டு 2 எனக் காட்டப்பட்ட நெற்பரப்பு பூச்சியம் குளி பதினொன்று (நெற்பரப்பு 00குளி11) ஆகும்.

இதற்கு எல்லைகள்:-

கிழக்கு : அராலி வீதி, 2ஆம் குறுக்குத்தெரு.

வடக்கு : வரைபட இலக்கம்-4764இன் படி துண்டு-1

மேற்கு : சவக்காலை.

தெற்கு : முகமது அப்துல்காதர் முகமது மீராலெப்பை அவர்களின் ஆதனம்.

இதடங்கலும் கிழக்கு எல்லையில் காணப்படும் பாதையை பாவிக்கும் உரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை முகைதீன் அப்துல் காதர் சுஜீனா பானு (மறு பெயர் அப்துல் காதர் சுஜீனா பானு) என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது முகைதீன் அப்துல் காதர் சுஜீனா பானு ( மறுபெயர் அப்துல் காதர் சுஜீனா பானு) என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-2065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## கார்–பேருந்து–லொறி

# ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து-9 பேர் உயிரிழப்பு



(டில்லி)

மஹாராஷ்டிரா மாநிலம் புனே பகுதியில் கார், பேருந்து மீது லொறி மோதிய விபத்தில் 9 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

லொறி ட்ரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நின்று கொண்டிருந்த கார் மீது மோதியது.

கார் நிலைதடுமாறி அந்த வழியாக வந்த பேருந்து மீது மோதியது.

ஒரே நேரத்தில், கார், பேருந்து மற்றும் லொறி ஆகிய மூன்றும் விபத்தில் சிக்கியது பரபரப்பை ஏற்படுத்தியது. உயிரிழந்த 9 பேரும் காரில் பயணம் மேற்கொண்டனர் என பொலிஸார், தெரிவித்துள்ளனர்.

மஹாராஷ்டிரா மாநிலம் புனே அருகே நாராயன் கவுன் பகுதியில் கார், பேருந்து மீது லொறி மோதி விபத்து ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், உள்ளூர் மக்கள் உதவியுடன் மீட்பு பணிகளை மேற்கொண்டனர்.

இந்த விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். இவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பொலிஸார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

லொறியை ட்ரைவர் அதிவேகமாக இயக்கியது தான் விபத்திற்கு காரணம் என்பது தெரியவந்துள்ளது. (6)

# பிணைக்கைதிகளை

# உடன்படிக்கை

## இஸ்ரேலிய பிரத



(காசா)

**காசா பகுதியில் ஹ... கைதிகளை திருப்பி அ... பட்டுள்ளதாக இஸ்ரேல்... தெரிவித்துள்ளார்.**

காசாவில் போர்நிறுத்தம் மற்றும் பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதற்காக பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையில் கடைசி நிமிடத்தில் தடைகள் ஏற்பட்டதாக நெதன்யாகுவின் அலுவலகம் கூறிய ஒரு நாள் கழித்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

அதன்படி பிணைக்கைதி

கை... தம்... அத... சிய... யை... உத்... நெத... நேர... வித்... இ... நில...

# அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்த ஜஸ்டின் ட்ரூடோ



(ஒட்டாவா)

கனடாவில் அடுத்து நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்றும், அரசியலில் இருந்து விலகுவதாகவும் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

"எனது சொந்த முடிவுகளின் அடிப்படையில் நான் வரவிருக்கும் தேர்தலில் போட்டியிட மாட்டேன்" என்று ட்ரூடோவின் கருத்துக்களை மேறகோளிட்டு குளோபல் நியூஸ் கடந்த புதன் கிழமை வெளியிட்டுள்ளது. அதேநேரம் அரசியலில் இருந்து விலகிய பிறகு என்ன செய்வேன் என்று யோசிக்கத் தனக்கு அதிக நேரம் இல்லை என்றும் ட்ரூடோ கனேடிய செய்திச் சேவையிடம் கூறியுள்ளார்.

கடும் அழுத்தங்களுக்கு மத்தியில் கனடாவின் லிபரல் கட்சி தலைவரை தேர்ந்தெடுத்ததை அடுத்து, கனடா பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக ட்ரூடோ அண்மையில் அறிவித்திருந்தார்.

ட்ரூடோ பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின்னரும் தேர்தல் நடைபெறும் வரை சில மாதங்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பார்.

தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்ற அவரது முடிவிற்குப் பிறகு ட்ரூடோ புதிய பாராளுமன்றத்தில் எம்.பியாக இருப்பதை நிறுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-6)

# இந்திய நிறுவனங்கள் மீதான தடை நீக்கம்

## அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம், பாபா அணு ஆராய்ச்சி மையம் உட்பட 3 இந்திய நிறுவனங்கள் மீதான தடையை நீக்கி அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஜனாதிபதியாகப் பதவியேற்க உள்ளார். இந்நிலையில் தற்போதுள்ள ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகமானது இந்தியாவின் 3 நிறுவனங்களுக்கு எதிரான தடையை நீக்கி உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தொழில் மற்றும் பாதுகாப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, "பனிப்போர் காலத்தின்போது இந்தியாவை சேர்ந்த இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம், பாபா அணு ஆராய்ச்சி மையம், இன்டியன் ரேர் எர்த்ஸ் ஆகிய 3 நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது போன்று மேம்பட்ட எரிசக்தி ஒத்துழைப்புக்கான தடைகளைக் குறைப்பது அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் நோக்கத்துக்கு ஆதரவாக இருக்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை நலன்களுக்கு முரணான செயல்களுக்காக சீன நாட்டை சேர்ந்த 11 நிறுவனங்கள் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. (நி-6)

# விெ... ஸ்டே...



(வோஷிங்...

ஸ்பேஸ் ...தின் 7 ஆ... சோதனை மு... ஷிப் வெடித்து... ஞானிகளை... ளாக்கியது.

உலகின்மு... திபர்களில் ஒ... மஸ்க்கின் ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# களை விடுவிக்கும் கைச்சாத்து

## ரதமர் தெரிவிப்பு

**ல் ஹமாஸ் பிடியில் உள்ள பிணைக் ப்பி அனுப்புவதற்கான ஒப்பந்தம் எட்டப் ஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு**

களை விடுவிப்பதற்கான ஒப்பந்தம் எட்டப்பட்டதாகவும் பின்னர் அதற்கு ஒப்புதல் அளிக்க அரசியல்-பாதுகாப்பு அமைச்சரவையைக் கூட்டுமாறும் பிரதமர் உத்தரவிட்டதாகவும் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

இவ் ஒப்பந்தம் காசா பகுதியில் நிலவும் மோதலை இடைநிறுத்துகிறது மற்றும் காசாவில் உள்ள போராளிகளால் பிணைக் கைதிகள் இஸ்ரேலால் பிடிக்கப்பட்ட பாலஸ்தீனிய கைதிகளுக்கு ஈடாக விடுவிக்கப் பட்டது.

மேலும் இந்த ஒப்பந்தம் நூறாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் காசாவில் உள்ள தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கும்.

இதனிடையே வியாழக்கிழமை இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களில் போரால் அழிக்கப்பட்ட பிரதேசத்தில் குறைந்தது 72 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

## முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு 14 ஆண்டுகள் சிறை விதிப்பு



(இஸ்லாமாபாத்)

ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு 14 ஆண்டுகளும் அவரது மனைவிக்கு 7 ஆண்டுகளும் சிறை தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பி.டி.ஐ கட்சியின் நிறுவனருமான இம்ரான் கான் பல்வேறு குற்றவழக்குகளில் சிக்கி சிறையில் இருந்து வருகிறார். பரிசுப் பொருட்கள் பெற்றதில் முறைகேடு, அரசு ரகசியங்களை கசிய விட்டது உள்ளிட்ட வழக்குகளில் சிறை தண்டனை பெற்றுள்ளார்.

இந் நிலையில் பிரிட்டனில் இருந்து பாகிஸ்தான் அரசுக்கு வர வேண்டிய பணத்தை தனி நபர் அறக்கட்டளையில் வரவு வைத்து, அதற்கு லஞ்சமாக பல நூறு ஏக்கர் நிலத்தை லஞ்சமாக பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த 2023 ஆம் ஆண்டு, ஊழலைத் தடுக்கும் பொறுப்பு நிறுவனமான, பாகிஸ்தானின் தேசிய பொறுப்புடைமை பணியகம் (NAB) இந்த குற்றச்சாட்டை முன் வைத்தது. இம்ரான் கான், அவரது மனைவி புஷ்ரா பீபி, தொழிலதிபர்கள் சிலர் மீது இந்த குற்றச்சாட்டு தொடரப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் 3 முறை தீர்ப்பு திகதி ஒத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று இம்ரான்கானுக்கு 14 ஆண்டுகளும் அவரது மனைவிக்கு 7 ஆண்டுகளும் சிறை தண்டனை விதித்து கோர்ட் அதிரடித் தீர்ப்பை வெளியிட்டுள்ளது.

வழக்கில் தொடர்புடைய மற்ற அனைவரும் தலைமறைவு ஆகி விட்டனர். அவர்களைத் தேடப்படும் குற்றவாளிகள் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. (நி-6)

# விண்ணில் வெடித்துச் சிதறிய ஸ்பேஸ் நிறுவனத்தின் ஸ்டாஷிப்



(வோஷிங்டன்)

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் 7 ஆவது ரொக்கெட் சோதனை முயற்சியில் ஸ்டார்ஷிப் வெடித்துச் சிதறியது விஞ்ஞானிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

உலகின் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவரான எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், ஸ்டார்ஷிப் ரொக்கெட்டின் பூஸ்டரை பத்திரமாக தரையிறக்கும் நோக்கத்துடன் அடுத்தடுத்து ஸ்டார்ஷிப் ரொக்கெட் சோதனையை செய்து அசத்தி வருகிறது. அந்த வகையில், நேற்று முன்தினம் 7 ஆவது முறையாக அந்த ரொக்கெட் சோதிக்கப்பட்டது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஸ்டார்ஷிப் ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.

சற்று நேரத்துக்கு பிறகு ரொக்கெட் இரண்டாக பிரிந்து பூஸ்டர் பகுதி பூமியை நோக்கி செங்குத்தாக கீழே இறங்கத் தொடங்கியது. ஆனால் அதன் பிறகு, 8.5 நிமிடங்களில் ஸ்டார்ஷிப் பின் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அது கரீபியன் கடல் பகுதியில் வெடித்துச் சிதறி விழுந்தது. இது ஸ்பேஸ் எக்ஸ் விஞ்ஞானிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இது தொடர்பாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இதுபோன்ற சோதனையின் மூலம் நாம் கற்றுக்கொள்வதில் இருந்து வெற்றி கிடைக்கும். மேலும் இன்று ஸ்டார்ஷிப் மீதான நம்பகத்தன்மையை அதிகரிக்க இந்த பூஸ்டர் நமக்கு உதவிகரமாக இருக்கும் என தெரிவித்துள்ளது.

ஸ்டார்ஷிப் வெடித்து சிதறியது குறித்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தொலைத்தொடர்பு மேலாளர் டான் ஹூ"ட் கூறுகையில், "அனைத்து தரவுகளையும் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். எங்கு தவறு நடந்துள்ளது என்பதைக் கண்டறிய சிறிது காலம் எடுக்கும்" எனக் கூறினார். (நி-6)

## காற்றின் வேகத்தில் தணிவு; லாஸ் ஏஞ்சல்ஸில் மாற்றம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸில் காற்றின் வேகம் தற்போது கொஞ்சம் தணிந்துள்ளமையால் தீயை அணைக்கப் போராடி வரும் தீயணைப்பு வீரர்களின் பணிகளில் முன்னேற்றத்தை கொடுத்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி ஏற்பட்ட காட்டுத் தீ லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவி பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்தது

இதனையடுத்து தண்ணீர் பற்றாக்குறையால் ஹெலிகொப்டர்கள் வாயிலாக கடல் நீரில் தண்ணீர் இறைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணிகளும் நடைபெற்று வந்தன .

ஒன்பது நாட்களுக்கும் மேலாக தீ எரிவதால் இதுவரை மொத்தம் 40,000 இற்கும் அதிகமான ஏக்கர் பரப்பு எரிந்துள்ளதுடன் 12,000இற்கும் அதிகமான கட்டடங்கள் தீயால் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் காட்டுத் தீயால் இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநல பாதிப்பை ஏற்படுத்தும் கே டு சிட்டி போதைப்பொருள்

## விரைந்து தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

**கே டு சிட்டி எனப்படும் சிந்தடின் மர்சுவானா என்ற போதைப்பொருள் விற்பனை இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாண வர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப் படுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**



இதனைத் தடுப்பதற்குத் தேவையான சட்ட நடவ டிக்கைகளை எடுக்குமாறு மேல் மாகாண பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு தலைமையகம் அறிவு றுத்தல் விடுத்துள்ளது.

இந்தப் போதைப்பொருள் ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கடதாசித் தாள் போன்று காட்சிய ளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்தப் போதைப்பொருள் உட லுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்து வதுடன் மனநல பாதிப்பையும் ஏற்படுத்தும் என குறிப்பிடப்பட் டுள்ளது.

இதற்கமைய இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி. புலனாய்வு மற்றும் சமூக பொலிஸ் அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெற்று சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200-300 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 1000-1100 | 1000 |
| தக்காளி | 300 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200-250 | 200 |
| கோவா | 200 | 200 | 250 |
| கரட் | 350 | 300 | 400 |
| பூசணி | 120 | 100 | 200 |
| புடோல் | 170 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 100-140 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | -- | 300 |
| பாகற்காய் | 800 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 600 | 500 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 450 | 600 |
| கறிமிளகாய் | 900 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 2000 |
| போஞ்சி | 400 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 |
| தேசிக்காய் | 360 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 100 | 180-220 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 |
| வெங்காயப்பூ | 650 | 150-400 | 600 |
| முள்ளங்கி | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | -- | 60 |
| வல்லாரை | 60 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 302



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## நம்பிக்கை

காசியிலே இருக்கின்ற கடவுள் காசி விஸ்வநாதன். அங்கே இருக்கின்ற தேவி காசி விசாலாட்சி. இவர்கள் இரண்டு பேரும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்த போது... கடவுள் சொன்னார்: இந்த மனிதர்களை நாங்கள் மிகவும் நம்பிக்கையோட தான் படைத்திருக்கின்றோம். இருந்தாலும் அவர்களுக்கு தான் நம்பிக்கை இல்லை. எதிலேயும் ஒரு உண்மையான நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றார்.

ஏன் அப்படி சொல்லுகிறீர்கள்? அதோ பாருங்கள் எவ்வளவு பேர் காசியைத் தேடிக்கொண்டு வந்து கங்கையிலே குளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நம்பிக்கை இல்லை என்றால் இவ்வளவு தூரம் தேடிக்கொண்டு இங்கே வருவார்களா? என்றார் தேவி.

சரி அதை சோதித்துப் பார்க்கலாம் என்று இரண்டு பேரும் முடிவு செய்தார்கள். உடனே ஒரு திட்டம் போட்டார்கள். எப்படி என்றால், நாங்கள் இரண்டு பேரும் பக்தர்கள் மாதிரி உருவத்தை மாற்றிக்கொண்டு கங்கைக் கரைக்குப் போக வேண்டும். நான் கங்கையிலே இறங்கி குளிக்கிறேன். கொஞ்ச நேரத்தில் சுழலிலே மாட்டிக் கொண்ட மாதிரி நடிக்கிறேன். நீங்கள் உடனே கரையிலே இருந்து சத்தம் போடுங்கள் என்னுடைய கணவனை யாராவது காப்பாற்றுங்கள் என்று சத்தம் போடு. அதனுடன் இன்னும் ஒன்று சொல்ல வேண்டும். யாராவது ஒரு புண்ணிய ஆத்மா அவர் அருகில் போய் அவர் முடியைப் பிடித்துத் தூக்க வேண்டும். அப்படி ஒரு சாபம் இருக்கிறது எங்களுக்கு. புண்ணிய ஆத்மா அதாவது எந்த பாவமும் இல்லாத ஒருத்தர் தான் அவரைக் காப்பற்ற முடியும்! அப்படிபட்டவர்கள் யாராவது கங்கையிலே குதித்து என் கணவரைக் காப்பாற்றுங்கள் என்று கூச்சல் போடு. என்ன நடக்குது என்று பார்க்கலாம் என்றார் கடவுள்.

சரி என்று சொல்லி இரண்டு பேரும் சாதாரண பக்தர்கள் மாதிரி கங்கைக் கரைக்கு வந்தார்கள். கடவுள் இறங்கி குளித்தார். திட்டம் போட்ட மாதிரி சுழலிலே மாட்டிக்கொண்ட மாதிரி கத்தினார்.

கரையிலே இருந்த தேவி, ஐயோ என் கணவரை காப்பாற்றுங்கள் என்று கத்தினார். பலபேர் ஓடி வந்தார்கள். உடனே அவர்கள், பாவம் இல்லாத புண்ணியாத்மா ஒருவராலே தான் எனது கணவர் காப்பாற்றப்பட வேண்டும் என்பது விதி. அதனாலே புண்ணியாத்மா யாராவது அவரிடம் போய் அவர் முடியைப் பிடித்து தூக்கினால் அவரைக் காப்பாற்றி விடலாம் என்றார்.

இவர்கள் இப்படிச் சொன்னதும் எல்லோரும் திகைத்துப் போய் நின்று விட்டார்கள். ஒவ்வொருத்தருக்கும் அவர்கள் செய்த பாவம் எல்லாம் ஒவ் வொன்றாய் ஞாபகத்துக்கு வர ஆரம்பித்து விட்டது.

சரி இதற்கு நாம் லாயக்கு இல்லை என்று ஒதுங்கிப் போக ஆரம்பித்து விட்டார்கள்.

இந்தச் சமயத்திலே யாரோ ஒருவர் வேகமாக ஓடி வந்தார். ஆற்றிலே குதித்தார். அவரிடம் போனார். முடியைப் பிடித்து தூக்கினார். அவரைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து விட்டார்.

அப்படிக் காப்பாற்றிய அந்த ஆளை இவர்கள் இரண்டு பேரும் தனியாக கூட்டிக் கொண்டு ஒரு மண்டபத்துக்கு வந்தார்கள். வந்து விசாரித்தார்கள்.

நீ யாரப்பா என்று கேட்டார்கள். ஏதும் தெரியாதது மாதிரி நான் இந்த ஊர். அன்னச் சத்திரத்திலே வேலை செய்கின்ற ஒரு சமையல்காரர் என்றார்.

நீ கங்கையிலே குளிக்கிறது உண்டா? என்று கேட்டார்கள். நான் இந்த ஊரிலேயே தான் இருக்கின்றேன். இருந்தாலும் தினமும் கங்கையிலே குளிப்பது இல்லை. எப்போதாவது ஒரு நாள் அங்கே குளிப்பேன் என்றார். கங்கையிலே மூழ்கி எழுந்திருந்தால் பாவம் தொலையும் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது அங்கே இன்றைக்கு கங்கையிலே குளித்துக் கொண்டிருக் கிறவர்கள் எல்லாம் தங்களை புண்ணியாத்மாவாக நினைக்கவில்லை. கங்கையிலே குளிக்காத நீ உன்னை புண்ணியாத்மாவாக நினைத்து என்னைக் காப்பாற்ற வந்தியே அது எப்படி? என்று கேட்கிறார்.

அதற்கு அந்த ஆள் சொல்கிறான். கங்கையிலே குதித்ததற்கு பின்பு தானே உங்களைக் காப்பாற்றப் போகிறோம். அப்படி குதிக்கும் போதே என்னுடைய பாவம் எல்லாம் போயிருக்கும் நான் புண்ணியாத்மாவாக ஆகியிருப்பேனே அதனாலே தான் துணிந்து வந்து உங்களைக் காப்பாற்றினேன் என்றார்.

கடவுளும் தேவியும் அவனுக்கு காட்சி கொடுத்தார்களாம். ஸ்ரீராமனந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள் இதைச் சொல்லியிருக்கிறார். கங்கையிலே குளித்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கே தங்களுடைய பாவம் போகும் என்கிற நம்பிக்கை பரிபூரணமாக இல்லை. குளிக்காத ஒருவனுக்கு அந்த நம்பிக்கை இருந்தது! அதனாலே அவனாலே கடவுளைப் பார்க்க முடிந்தது.

கடவுளை நாமும் பார்க்க முடியுமா? முடியாதா என்கின்ற குழப்பம் எல்லாம் நமக்கு வேண்டாம். நம்பிக்கையோடு வாழ வேண்டும் என்கிற உண்மையை மட்டும் இந்தக் கதையிலிருந்து நாம் புரிந்துக் கொண்டால் போதும்.

ஏன் என்றால் இந்தக் கதையை கேட்டுக் கொண்டு என்னுடைய நண்பன் ஒருத்தன் குதர்க்கமாக என்னிடம் ஒரு கேள்வி கேட்டான்.

ஏன் சார் கங்கையிலே குளித்தால் பாவம் எல்லாம் போயிடும் என்று சொல்லுறார்களே.. நான் எனக்கு வேண்டாத ஒருத்தனை அழைத்துக் கொண்டு போய் கங்கையிலேயே தள்ளிவிட்டு விட்டு, அதற்கு பின்பு அங்கேயே முழுக்குப் போட்டு நான் செய்த பாவத்தை கழுவி விட்டு, மறுபடியும் உங்களிடம் வந்து விடுகிறேன். நீங்கள் என்னை புண்ணியாத்மா என்று ஒத்துக் கொள்வீர்களா சார்? என்றார்.

ஆள் கொஞ்சம் அசந்தா நம்மளையே அங்கே அழைத்துக் கொண்டு போனாலும் போயிடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகள் சிறையில் இல்லை என்றால் அவர்களை காணாமல் ஆக்கியது யார்?

## அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி



(நெளுக்குளம்)

அரசியல் கைதிகள் என்று எவரும் சிறையில் இல்லை எனக்கூறுவார்களாயின் அவர்களை காணாமல் ஆக்கியது யார்? என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி யெழுப்பியுள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்படல் வேண்டும் என்பதும் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் தமிழர்களின் மிக நீண்ட கால அரசியல் கோரிக்கையாகும். ஆனால் அரசாங்கத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அரசியல் கைதிகள் என்று சிறைகளில் எவரும் இல்லை எனக் குறிப்பிட்டு உள்ளமை அவர்களின் அரசியல் அநாகரிகத்தை அம்பலப்படுத்தி உள்ளதோடு வாக்களித்த தமிழர்களையும் ஏமாற்றி உள்ளமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் உள்ளனர் அவர்களை விடுதலை செய்வோம் என்று கூறி, பதவிக்கு வந்ததும் அரசியல் கைதிகள் என்று எவரும் சிறையில் இல்லை எனக் கூறுவார்களாயின் அவர்களை காணாமல் ஆக்கியது யார்?

இதற்கு முன்னரும் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா அவர்கள் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றே குறிப்பிட்டிருந்தார். அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. இது அரசாங்கத்திற்குள் பிளவையே வெளிபடுத்துகின்றது? தமிழர்களின் அரசியல் சார்ந்த விடயங்களில் எந்த ஒரு துளி நகர்வையேனும் மேற்கொள்ளப் போவதில்லை என்பதும் இதன்மூலம் தெளிவாகின்றது.

கடந்த கால ஆட்சியாளர்களைப் போல் இந்த அரசாங்கமும் தமிழர்களின் அரசியலை பயங்கரவாதத்திற்குள் முடக்கி பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுக் கொடுக்க முன் நிற்கின்றது என்பது தெளிவாகின்றது.

கடந்த காலங்களில் அரசியல் கைதிகள் தங்கள் விடுதலையை வலியுறுத்தி சிறைக்குள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர். சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தையும் தொடர்ந்தனர். இவர்களின் விடுதலைக்காக தமிழர் தாயகத்திலும் கொழும்பிலும் சிங்கள மக்களின் ஆதரவோடு பல்வேறு வடிவங்களில் விடுதலைக்கான முயற்சிகள் மேற்கொண்ட போதும் அது இன்று வரை பலன் அளிக்கவில்லை.

நல்லாட்சி எனக்கூறப்படும் மைத்திரி-ரணில் ஆட்சிக் காலத்தில் அமைச்சு பதவிகளில் இருந்த தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அரசியல் கைதிகளின் விடு தலைக்காக ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதிலும் ஈடுபட வில்லை. தற்போது எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு அரசியல் கைதிகளை விடு தலை செய்ய வேண்டும் எனக் கூறுவது அரசியல் ஏமாற்று நாடகமே.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடகிழக்கு எங்கும் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் மேலும் வலுப் பெறல் வேண்டும். இது குறுகிய அரசியல் நோக்கத்திற்கு அப் பால் திகழ வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

நாட்டின் எதிர்கால நலன் கருதி தமிழர்களின் அரசியல் அபிலாசைகளோடு முன் செல்ல அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்து ஆட்சியாளர்கள் தம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-299)

# விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தரை காப்பாற்றிய பொலிஸார்

(வவுனியா)

புதுக்குடியிருப்பு பொலிஸாரின் துரித நடவடிக்கையினால் தூக்கில் தொங்கிய குடும்பஸ்தர் ஒருவர் காப்பாற்றப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு விசுவமடு ரெட்பானா பகுதியில் கணவன் மனைவிக்கிடையில் வாய்த்தர்க்கம் இடம்பெற்றுள்ளது. அது தொடர்ந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கணவன் தூக்குப் போட வீட்டு அறைக்குள் சென்று கதவை மூடியுள்ளார். இதனை அவதானித்த மனைவி அவசர பொலிஸ் இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தகவல் வழங்கியுள்ளார்.

தகவல் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற புதுக் குடியிருப்பு பொலிஸார் வீட்டு அறைக்கதவினை உடைத்து தூக்கில் தொங்கிய குடும்பஸ்தரை மீட்டெடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட குடும்பஸ்தர் உடையார்கட்டு மூங்கிலாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (8-299)

# மன்னார் துப்பாக்கிச் சூடு; செல்வம் எம்.பி கண்டனம்



(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்னால் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கான முழுப்பொறுப்பையும் பொலிஸார் ஏற்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் நீதிமன்றத்திற்கு முன் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் உண்மையிலேயே கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு மன்னாரில் உள்ள பொலிஸார் முழுப் பொறுப்பையும் எடுக்க வேண்டும். நொச்சிகுளம் மக்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகிறார்கள். இன்றும் தொடர்ச்சியாக அந்த நொச்சிகுளம் கிராமத்தின் மக்கள் படிப்படியாக படுகொலை செய்யப்படுகின்ற சூழல் காணப்படுகிறது.

மன்னார் பொலிஸாருடைய மெத்தனப் போக்கும் இதில் அடங்கியிருக்கிறது. அந்த கிராமத்து மக்கள் அச்சத்தோடு வாழும் சூழலிலே மீண்டும் மன்னார் நீதிமன்றத்திற்கு முன் இந்த படுகொலைகள் நடைபெற்றிருக்கிறது. ஆகவே இது கண்டிக்கத்தக்கது.

இவ் விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியினதும் கவனத்திற்கும் பாராளுமன்றின் கவனத்திற்கும் முக்கியமான விடயமாக கொண்டு வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (8)

# சுண்டிக்குளம் கடற்கரையில் கரையொதுங்கிய மர்மப்பொருள்



(தருமபுரம்)

கிளிநொச்சி சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் இனந்தெரியாத மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கிய நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கிய உருளை வடிவிலான மர்மப் பொருளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுத்துக்கள் தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றது.

அண்மைக்காலமாக வடக்கு கடற்பரப்பில் பல்வேறு வித மான மர்மப் பொருட்கள் கரையொதுங்கி வருவது மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கிய உருளை வடிவிலான மர்மப் பொருளைக் கடற்படையினர் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-316)

முல்லைத்தீவு - புதுக் குடியிருப்பு - திம்பிலி பகுதியில் அமை ந்திருந்த நெல் களஞ்சியசாலையானது பல வருடங்களாக பாவ னையற்று காணப்பட்ட நிலையில் 'தூய்மையான இலங்கை' எனும் செயற்றிட்டத்தின் கீழ் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களால் துப்பரவு செய்யப்பட்டது.



(படம்:-சதீஸ்)

# குருந்தூர் மலை விவகார வழக்கு நீதிமன்றம் வழங்கிய உத்தரவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட மூவரும் நீதிமன்றால் அழைப்பு விடுக்கும் வரை ஆஜராகத் தேவையில்லை என முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில், குருந்தூர் மலையில் கடந்த 2022.06.12 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்து கொண்டமைக்காக தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் இ.மயூரன் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளதுடன் இந்த வழக்குடன் தொடர்புடைய ஆஜராகாத நபர்களை மன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## பஞ்சாப் கிங்ஸ் தலைவராக ஸ்ரேயாஸ் ஐயர் நியமனம்




2025 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் அணியின் தலைவராக ஸ்ரேயாஸ் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐபிஎல் 18ஆவது தொடருக்கான வீரர்களின் மெகா ஏலமானது கடந்த 11 ஆம் திகதி சவுதி அரேபியாவில் உள்ள ஜித்தா நகரில் நடைபெற்றது.

இதில் மொத்தம் 574 வீரர்கள் பங்கேற்றிருந்தனர். அந்தவகையில் நடைபெற்று முடிந்த இந்த மெகா ஏலத்தில் இந்திய வீரர் ஸ்ரேயாஸ் ஐயரை பஞ்சாப் கிங்ஸ் அணி ரூ.26.75 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது.

மேலும், ஐ.பி.எல் வரலாற்றில் மிகவும் அதிக தொகைக்கு ஏலத்தில் வாங்கப்பட்ட 2 ஆவது வீரர் என்ற பெருமையை ஸ்ரேயாஸ் ஐயர் பெற்றுள்ளார்.

முன்னதாக கடந்த ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கப்டனாக செயற்பட்ட ஸ்ரேயாஸ் ஐயர் அந்த அணிக்கு மூன்றாவது ஐபிஎல் கோப்பையை வென்று கொடுத்தார்.

இதேவேளை எதிர்வரும் மார்ச் 23 ஆம் திகதி ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6-8)

## கம்பீரின் பதவி நீடிப்பு குறித்து சம்பியன்ஷ் டிராபியின் பின்னர் முடிவு

### பி.சி.சி.ஐ தெரிவிப்பு



சம்பியன்ஸ் டிராபி தொடருக்குப் பின் பயிற்சியாளர் கம்பீர் பதவி குறித்து மறு பரிசீலனை செய்ய, பி.சி.சி.ஐ., முடிவு செய்துள்ளது.

இந்திய அணி, கப்டன் ரோகித் சர்மா தலைமையில் கடந்த ஆண்டு "ரி-20" உலக கோப்பை வென்றது. அடுத்து, டிராவிட் விலகியதால், 2023, ஜூலை மாதம், கம்பீர் 43, புதிய பயிற்சியாளர் ஆனார். இதன் பின் இந்திய அணிக்கு இறங்கு முகம் தான். இலங்கை மண்ணில் ஒரு நாள் தொடரை இழந்தது.

சொந்தமண்ணில் நியூசிலாந்திடம் முதன் முறையாக டெஸ்ட் தொடரை இழந்தது. 10 ஆண்டுக்குப் பின் "பார்டர்-கவாஸ்கர்" டிராபி தொடரில் இந்தியா கோப்பையை நழுவ விட்டது. கம்பீர் பயிற்சியில் இந்தியா பங்கேற்ற 10 டெஸ்டில், 6 இல் தோற்றது.

கம்பீர் குறித்து பி.சி.சி.ஐ., தரப்பில் ஒருவர் கூறியதாவது, இந்திய அணியில் பல ஆண்டுகளாக நிலவி வரும் "சூப்பர் ஸ்டார்" கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறார் கம்பீர். 2012 இல் கொல்கத்தா அணி கப்டனாக இருந்த போது, சென்னை அணிக்கு எதிரான ஐ.பி.எல்., பைனலில், முன்னணி வீரர் பிரண்டன் மெக்கலத்தை நீக்கி, அதிர்ச்சி கொடுத்ததாக தெரிவித்தார்.

மேலும் கம்பீர் ஒப்பந்தம் 2027 உலக கோப்பை தொடர் வரை உள்ளது என்றாலும், செயற்பாடுகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இதுவரை கம்பீர் பெரிய வெற்றி எதுவும் கொடுக்காத நிலையில், சம்பியன்ஸ் டிராபி தொடருக்குப் பின் பதவியில் நீடிப்பது கடினம் தான் என தெரிவித்தார். (6)

## ஒலிம்பிக்கில் செஸ் போட்டியை உள்ளீர்க்க வேண்டும்

### செஸ் சம்பியன் குகேஷ்



செஸ் போட்டி ஒலிம்பிக்கில் இடம்பெறுவதைப் பார்க்க விரும்புவதாக உலக செஸ் சம்பியன் குகேஷ் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் நடப்பு சம்பியனாக வலம் வந்த சீனாவின் டிங் லிரெனை வீழ்த்தி குகேஷ் சம்பியன் பட்டம் வென்றார்.

இதனையடுத்து, அவருக்கு பிரதமர் முதல் பல்வேறு துறை சார்ந்த பிரபலங்களும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வந்தனர்.

இது தொடர்பாக நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட உலக செஸ் சம்பியன் குகேஷ் பேசியதாவது,

ஒலிம்பிக்கில் செஸ் போட்டி இடம்பெறுவதைப் பார்க்க விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக ஒலிம்பிக் போட்டிகளை இந்தியா நடத்தும் பட்சத்தில், அதில் செஸ் இடம்பெறுவதை எதிர்நோக்கி காத்திருக்கிறேன் என்றார்.

மேலும் 2036 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (6-8)

## லாஸ் ஏஞ்சல்ஸ் நிவாரண நிதி வழங்கிய டென்னிஸ் வீரர்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம், லாஸ் ஏஞ்சலிஸ் நகரைச் சுற்றிலும் காட்டுத் தீ கட்டுக்கடங்காமல் பரவியமையில் பசிபிக் பாலிசேட்ஸ் பகுதியில் 19,000 ஏக்கர் நிலத்தையும் அல்டடேனா பகுதியில் 13,000 ஏக்கர் நிலத்தையும் காட்டுத்தீ எரித்துள்ளது.

இந்நிலையில் காட்டுத்தீக்கு இரையான லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தின் நிவாரண பணிகளுக்காக அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் வென்ற ரூ.71 லட்சம் பணத்தை வழங்கவுள்ளதாக அமெரிக்க டென்னிஸ் வீரர் டெய்லர் ப்ரிட்ஸ் தெரிவித்துள்ளார். என்னை வளர்த்த ஊருக்கு என்னால் இயன்றதை செய்வதாகவும் மக்களுக்கு உதவ பலர் முன் வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெஸ்ட் ஹில்ஸ் பகுதியிலும் பரவிய காட்டுத்தீ சில மணிநேரங்களுக்குள் 900 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பை தீக்கிரையாக்கியது. இதற்கிடையே அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை அணைக்கும் பணியில் கனடா தீயணைப்பு வீரர்களும் உதவி வருகின்றனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளைக் காட்டிலும் தூய உணர்வுகளே உண்மையான உதவிகள் புரிகின்றன.

~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேசிய தைப்பொங்கல் அர்த்தமுடையதாக இருக்க...

தேசிய தைப்பொங்கல் இன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெறுவதுடன் கலை நிகழ்வுகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

தமிழர் திருநாளாகிய தைப்பொங்கலை தேசிய தைப்பொங்கலாகக் கொண்டாடுவது வரவேற்கப்பட வேண்டியது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அதிலும் 2025ஆம் ஆண்டுக்கான தேசிய தைப்பொங்கல், வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவியின் ஆலயத்தில் இடம் பெறுவது சாலப் பொருத்துடையது.

ஆம், தெல்லிப்பழை, வலி வடக்கின் நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசம். கடந்த கால யுத்தத்தால் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்த இடங்களில் வலி வடக்கு முதன்மைக்குரிய இடம்.

அதிலும் நம் யாழ்ப்பாணத்தில் பொன் விளைகின்ற மண்வளம் கொண்ட வலி வடக்குப் பிரதேசம் நீண்ட நெடுங்காலமாக படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துள்ளது.

அதிலும் இன்னமும் படையினரின் ஆக்கிரமிப்பில் நம் மக்களின் இல் இடங்களும் விவசாயத்துக்குரிய நிலங்களும் அடங்கியிருப்பது வேதனைக்குரியது.

இதைவிட, வலி வடக்கில் இன்னமும் மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படாத ஆலயங்கள், மடாலயங்கள், சீவன்முத்தர்களின் சமாதிகள் என்பன பூசை வழிபாடின்றிக் கிடப்பது தமிழ் மக்கள் மத்தியில் தீராத கவலையையும் துன்பத்தையும் கொடுத்துள்ளது.

ஆம், சடையம்மா மடம் உட்பட எத்தனையோ சித்தர்களின் ஜீவசமாதிகளும் மடங்களும் படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

காங்கேசன்துறையில் படையினரால் அமைக்கப்பட்ட விடுதி வளாகத்தில், சுக்கிர வார திருவோணச் சத்திரத்திற்குரிய நூற்றிரண்டு பரப்பு நிலம் உள்ளடங்கியுள்ளது.

இதுகுறித்து ஆட்சித் தலைவர்களிடம் பலமுறை எடுத்துக் கூறியும் இதுவரை எதுவும் நடந்தாகவில்லை.

இப்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் ஆட்சி நடக்கிறது.

மாற்றம் வேண்டும் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த இலங்கை மக்கள் சேர்ந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர்.

அந்த மாற்றம் அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக்கி, அவரது தலைமையில் பலமான அரசாங்கத்தை ஏற்படுத்தியது.

எனவே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உடனடியாக தமிழ் மக்களின் நிலங்களையும் அவர்கள் காலாகாலமாக வழிபட்டு வந்த ஆலயங்களையும் மடாலயங்களையும் விடுவித்து, அவற்றை மக்களின் பயன்பாட்டுக்கு அனுமதிக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக, இன்று தேசியப் பொங்கல் நடைபெறுகின்ற வலி வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பொதுமக்களின் நிலங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இதைச் செய்யும்போதுதான் இன்று நடைபெறுகின்ற தேசியப் பொங்கல் அர்த்தமுடையதாக அமையும்.

## கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தால்
# வீதி விபத்துக்கள் வீழ்ச்சி
### பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துடன் இணைந்து பொலிஸாரினால் முன்னெடுக்கப்படும் போக்குவரத்து நடவடிக்கைகளினால் நாளாந்தம் வாகன விபத்துக்களினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

வீதி விபத்துக்களினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களில் நாளொன்றுக்கு ஒன்பதில் இருந்து இரண்டாகக் குறைந்துள்ளது.

சில நாட்களில் எந்தவித உயிரிழப்பும் வீதி விபத்துக்களினால் பதிவாகவில்லை.

அத்துடன், கடந்த டிசம்பர் 25 ஆம் திகதி கிறிஸ்துமஸ் தினத்தில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட போக்குவரத்து நடவடிக்கைகளினால் வாகன விபத்துக்கள் எதுவும் பதிவாகவில்லை.

இது வீதிப் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க சாதனை என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## மூன்று பாராளுமன்ற ஊழியர்கள் பணிநீக்கம்

(கொழும்பு)

பெண் பாராளுமன்ற ஊழியர்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய தாகக் குற்றம் சாட்டப்பட்ட மூன்று பாராளுமன்ற ஊழியர்கள் அவர்களின் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பலகட்ட விசாரணைகளின் பின்னர் இந்த மூன்று ஊழியர்களும் குற்றவாளிகள் என நிரூபணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹண தீரவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன குறித்த மூன்று ஊழியர்களையும் பணிநீக்கம் செய்ய ஒப்புதல் அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது நேற்று மேலும் குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது நேற்று முறையே 292.21 ரூபாவாகவும், 300.69 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 291.38 ரூபாவாகவும், 299.93 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

இதேவேளை, வளைகுடா நாணயங்கள் உட்பட ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதிநேற்று வீழ்ச்சியடைந்துள்ளது. (ம-7)

## ரி-56 ரக துப்பாக்கியுடன் சந்தேக நபர் கைது

ரி-56 ரக துப்பாக்கி உட்பட மேலும் சில உபகரணங்களுடன் சந்தேக நபர் ஒருவர் மேல் மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டார்.

இராணுவப் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவிற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது இராணுவத்தினருடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும், வெற்று மகசின் ஒன்றும் மற்றும் 187.62 x 39 மிமீ தோட்டாக்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வெலிகந்த, ருஹுணு கெத்தப் பகுதியில் வசிக்கும் 53 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இராணுவப் பொலிஸ் விஷேட புலனாய்வுப் பிரிவினர் மற்றும் மேற்கு மாகாணக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கவுனுடன் பாடசாலை வந்த ஆசிரியர்கள்
### திருப்பி அனுப்பிய அதிபர்

பன்னிப்பிட்டிய, தர்மபால வித்தியாலயத்தில் உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடுவதற்காக வந்த பெண் ஆசிரியர்கள் குழுவை பாடசாலையின் அதிபர் பிரதான நுழைவாயில் வழியாக அனுமதிக்க மறுத்ததால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

குறித்த ஆசிரியர்கள் புடவைகளுக்குப் பதிலாக கவுண்களை அணிந்து வந்ததன் காரணமாக அவர்களைத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வழக்கமான பாடசாலை தினம் என்பதால் பாடசாலைக்குள் பிரவேசிப்பதாயின் சேலை அணிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்படி ஆசிரியர்கள் கவுண் அணிந்து வந்ததால் பாடசாலைக்குள் அனுமதிக்க அதிபர் மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் போது அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் வாக்குவாதங்கள் ஏற்பட்டதன் காரணமாக நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸாரை அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இருப்பினும் இருதரப்பினரும் ஒரு உடன்பாட்டை எட்ட முடியாததால் விடைத்தாள் மதிப்பீட்டு நிலையத்தைத் தற்காலிகமாக மூடுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார். (ம-7)

## போதை மாத்திரைகளுடன் புத்தளத்தில் இருவர் கைது

புத்தளம் - கற்பிட்டி நகரில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விஷேட சுற்றிவளைப்பின் போது ஒருதொகை போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டிப் பொலிஸாருடன் இணைந்து வடமேற்கு கட்டளையின் விஜய நிறுவனக் கடற்படையினர் இந்த நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன்போது, கற்பிட்டி நகரில் பயணித்த சந்தேகத்திற்குரிய முச்சக்கரவண்டியொன்றை பரிசோதனை செய்தனர்.

இதன்போது குறித்த முச்சக்கரவண்டியில் மிகவும் சூட்சுமமான முறையில் விற்பனை செய்யும் நோக்கில் எடுத்து செல்லப்பட்டதாகக் கூறப்படும் 800 போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கற்பிட்டி - புதுக்குடியிருப்பு மற்றும் ஏத்தாளைப் பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 49 வயதுடையவர்கள் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகள் மற்றும் அவர்கள் பயணிப்பதற்குப் பயன்படுத்திய முச்சக்கரவண்டி என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் - பகுதி - II

01

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

19 ஆம் நூற்றாண்டின் பின்னரைக் காலப்பகுதியிலிருந்து தெருக்கள் குழு (Road committee) சுகாதாரசபை (Sanitary Board) போன்ற வகையில் அரசாங்கப் பணிகளை உள்ளூர் மட்டத்தில் இலகுவாக நிறைவேற்றுவதற்கு தனித்தனி குழுக்கள் கிராமமட்டத்தில் நிறுவப்பட்டன என்று முன்னர் பார்த்தோம். பின்னர் இவை முறையான உள்ளூராட்சி மன்றங்களாக வளர்ச்சி பெற்றன.

சுதந்திரத்திற்கு முன்னர் இவை கிராம சபை, பட்டின சபை, நகர சபை, மாநகர சபை என்ற உருவங்களைப்பெற்று உள்ளூர்மட்டத்தில் பொதுப்போக்குவரத்து, வடிகால் வசதிகள், சுகாதாரம், மற்றும் பொழுதுபோக்கு, நலன்புரி வசதிகள் போன்ற துறைகளில் சேவைகளை வழங்கி வந்தன.

இத்தகைய உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கும் போது பன்முகப்படுத்தல் என்ற கருத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டன. அதாவது ஒரு நிறுவனம் தனது பணிகளை இலகுவாக நிறைவேற்ற நிர்வாகத்தை பன்முகப்படுத்தல் அவசியம் என்பதன் அடிப்படையிலேயே மத்திய அரசாங்கத்தினுடைய மேற்படி சேவைகளும் உள்ளூர் மட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்டன.

ஆனால் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனம் மத்தியில் அமைந்துள்ள நிறுவனத்தின் கிளை நிறுவனமோ அல்லது பிராந்திய நிறுவனமோ அல்ல. மாறாக இந்த பன்முகப்படுத்தல் பணியகம் ஒன்றிற்குள் நடைபெறும் பன்முகப்படுத்தல் போலன்றி ஒரு மத்திய அரசாங்கத்திலிருந்து உள்ளூர் மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மன்றங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டனர்.

1946ஆம் ஆண்டு வரை இலங்கையின் உள்ளூராட்சி முறைமை மத்திய அரசாங்கம் என்ற ஒரே ஆளுகை அமைப்பின் கீழ் அரசாங்க அதிபர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கிவந்திருக்கின்றது.

இவ்வாண்டில் உள்ளூராட்சித் திணைக்களம் என்ற திணைக்களம் உருவாக்கப்பட்டதோடு உள்ளூராட்சி முறைமை தனியான தொரு ஆளுகை அமைப்பாக உருவாக்குவதற்குத் தேவையான தொரு அடித்தளமும் உருவாக்கப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்மொழியப்பட்ட பல்வேறு உள்ளூராட்சி அமைப்பு வடிவங்களும் 1987 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறையுடன் மேலும் தெளிவான ஒரு அந்தஸ்தைப் பெற்றன. 1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறைமை அமுலாகும் போது உள்ளூராட்சி என்ற விடயம் மாகாணசபைகளுக்கு உரிய விடயமாக குறித்தொதுக்கப்பட்டு அவற்றில் நிர்வாகம் மாகாண சபையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

ஆனால் அமைப்பு உருவாக்கம் மற்றும் சட்ட உருவாக்கம் என்ற விடயங்கள் மத்திய அரசாங்கத்திடமே தக்கவைக்கப்பட்டன. 1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறை அறிமுகமானதுடன் இலங்கையின் ஆட்சிக்கு பொறுப்பாக ஒரே ஆளுகை அமைப்பாக இருந்த மத்திய அரசாங்கமும், பன்முகப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட உள்ளூராட்சி முறைமையும் புதிய அந்தஸ்தைப் பெற்றன.

அப்போதிலிருந்து இலங்கையின் ஆளுகைப் பொறுப்பு மூன்று படிநிலை ஆளுகை அமைப்புக்களிடம் கையளிக்கப்படுகின்றது. இவை பல உள்ளக முரண்பாடுகளையும் தெளிவின்மைகளையும் கொண்டிருந்த போதும் மூன்று படிநிலையிலுள்ள ஆளுகை அமைப்புக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

முதலாவது படிநிலை ஆளுகை அமைப்பாக மத்திய அரசாங்கமும், இரண்டாவது படிநிலை அமைப்பாக மாகாண அரசாங்கமும், மூன்றாவது படிநிலை அமைப்பாக உள்ளூராட்சி முறையும் அமைந்தன. அதே ஆண்டில் அதாவது 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதிய பிரதேச சபைகள் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து நவம்பர் மாதம் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தமும் மாகாண சபைகள் சட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டன.

பிரதேசசபைகள் சட்டம் அதுவரை வளர்ச்சி பெற்றிருந்த உள்ளூராட்சி தொடர்பான பல முன்னேற்றகரமான கருத்துக்களையும் உள்வாங்கியிருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக பிரதேசசபைகள் சட்டம் இன்றுவரை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பூரணமாக பரீட்சிக்கப்படவில்லை.

இதற்குக் காரணங்கள் உள்ளூராட்சி முறைமையை நிர்வகிக்கின்ற பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட மாகாணசபை முறைமை ஒழுங்காக இயங்காமையும், அன்றிலிருந்து நிலவிய அரசியல் பரபரப்பான சூழ்நிலைகளும், மத்திய அரசின் விருப்பின்மையும், மக்களது கவனம் திசைதிருப்பப்பட்டதுமாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வு, மாகாணசபை முறைமை என்பவை பற்றிய பரபரப்பான விவாதங்களின் கீழ் பிரதேசசபைகள் சட்டம் கவனிப்பாரற்று புதைந்து போய்விட்டது.

மேலே கூறியது போல்அதிகாரப்பகிர்வு செய்யப்பட்ட அரசாங்கத்தின் முக்கிய அங்கங்கள் ஒன்பது மாகாண சபைகள் ஆகும். அடுத்த அடுக்கில் 24 மாநகரசபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் (கிராமப்புற உள்ளாட்சிகள்) உள்ளடங்கிய 341 உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன .

இவற்றுக்கான முதலாவது கலப்பு முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் 2018 பெப்ரவரி 10 இல் இடம்பெற்றன. இத்தேர்தலில் 15.8 மில்லியன் வாக்காளர்கள் 341 உள்ளூராட்சி சபைகளில் இருந்து 8,356 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய, வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர்.

இம் முறைப்படி, 60% (5092) உறுப்பினர்கள் வட்டாரங்களில் இருந்து நேரடியாகவும், 40% (3264) உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தேர்தல்களில் 70% வாக்காளர்கள் வாக்களித்தனர். பெரும் வன்முறைகள் எதுவுமின்றி வாக்களிப்புகள் இடம்பெற்றன.

341 உள்ளூராட்சி சபைகளுள் 206 உள்ளூராட்சி சபைகளில் 385 தொங்கு ஆசனங்கள் உருவாகி இருந்தன. மிகுதி 136 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் இல்லை.

### 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் - யாழ் மாவட்டம்

01. யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபையில் மொத்தமாக 48 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் 44 கிராம அலுவலர் பிரிவுகளின் முழுப் பிரதேசமும் 4 கிராம அலுவலர் பிரிவுகளின் பகுதிப் பிரதேசங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது J99, J123, J94 மற்றும் J96 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் ஒரு பகுதி நல்லூர் பிரதேச சபைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாநகர சபை 27 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை - 27 ஆகும். யாழ்ப்பாண மாநகரசபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 19.16 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத்தொகை கிட்டத்தட்ட 85206 பேர். 2018ஆம் ஆண்டு மாநகர சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 56182 ஆகும். இத்தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), மக்கள் விடுதலை முன்னணி (JVP), தமிழர் விடு தலைக் கூட்டணி (TULF) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

(தொடரும்....)

**யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | யாழ்ப்பாணம் மாநகர சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 27 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 27 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 45 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 14,424 | 35.76% | 16 | 14 | 2 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 12,020 | 29.80% | 13 | 9 | 4 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 8,671 | 21.50% | 10 | 2 | 8 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,423 | 6.01% | 3 | 1 | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,479 | 3.67% | 2 | - | 2 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,071 | 2.66% | 1 | 1 | - | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 242 | 0.60% | - | - | - | - |
| மொத்தம் | 40,330 | 100% | 45 | 27 | 18 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 40,330 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 586 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 40,916 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 56,182 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்தவாரம்...

ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ஜகத் விக்ரமரத்ன தலைமையில் 2025.01.10ஆம் திகதி கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனவரி 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து மு.ப 10.00 மணி முதல் மு.ப 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப 11.00 மணி முதல் மு.ப 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், மு.ப 11.30 முதல் பி.ப 5.30 வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் "கிளீன் ஸ்ரீ லங்கா" திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்று, 22ஆம் திகதி புதன்கிழமை இரண்டாவது நாள் விவாதத்துக்காக ஒத்திவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகச் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (ம-7)

## மத்திய குழு...

நடைபெறவுள்ளது.

திருகோணமலையில் உள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர் கூடத்தில் இன்று காலை 10 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் தலைமையில் குறித்த கூட்டம் நடைபெறவுள்ளது. (ம-7)

## குற்றப் புலனாய்வு...

ருந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி நேற்று வெள்ளிக்கிழமை திணைக்களத்தில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது, சுமார் 2 மணித்தியாலங்கள் அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## சமஷ்டியே...

ஒன்றியத்தினரிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினருக்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது, கடந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்த கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்ற சமநேரத்தில், ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துக் கோரும் பயணத்தின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பிலும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் குறித்தும் கோரப்பட்டபோது,

உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும் சேர்ந்து ஒஸ்லோவில் இணங்கிக் கொண்ட இறுதி விடயம் என்ற அடிப்படையில் 13வது திருத்தச் சட்டத்துக்கும் சமஷ்டி முறைமைக்கும் இடையிலான நடைமுறை வேறுபாடுகள், 13வது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளி சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டியதன் நியாயப்பாடுகள், கனடா, சுவிஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் சமஷ்டி முறைமையையும், இந்திய மாநில சுயாட்சி முறைமையையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் சமஷ்டியை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள யதார்த்தப் புறநிலைகள் குறித்துப் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 20 சதவீத...

யில் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கான மின்சாரக் கட்டணம் 21 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

உணவகங்களுக்கு 31 சதவீதமும் மற்றும் தொழில்துறைக்கு 30 சதவீதமும் மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ள நிலையில், பொது நோக்கத்திற்கான மின்சாரக் கட்டணங்கள் 12% குறைக்கப்பட்டுள்ளன.

அரசு நிறுவனங்களுக்கான கட்டணங்களை 11 சதவீதத்தாலும் மற்றும் தெரு விளக்குகளுக்கான கட்டணங்களை 11 சதவீதத்தால் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஈழத்தின்...

ஈழத்தின் நாடகப் பேராளுமை குழந்தை ம.சண்முகலிங்கம் (வயது-92) நேற்று திருநெல்வேலியில் காலமானார்.

மண்சுமந்த மேனியர், பஞ்சவர்ண நரியார், கண்மணிக்குட்டியர், கண்டுறியாத கதை, முயலார் முனைகிறார், நீ செய்த நாடகமே உட்பட பல நாடகங்களை இயற்றியுள்ளார்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் நடிகராக, நாடக ஆசிரியராக, நெறியாளராக, தயாரிப்பாளராக, ஆய்வாளராக, நாடகப் போதனாசிரியராக, நாடகக் களப் பயிற்சியாளராக, விமர்சகராக, உலக நாடக வரலாற்றாசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, நாடக அரங்கக் கல்லூரி நிறுவுநராக, கல்விசார் அரங்கினை பிரக்ஞைபூர்வமாக உருவாக்கியவர் எனப் பல்பரிமாணமுடையவராக பல்துறை ஆற்றல் கொண்டவராக விளங்கியவர்.

குழந்தை ம.சண்முகலிங்கம் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றியதோடு செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றியிருந்தார்.(ம-7)

## வட...

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கடற்றொழிலாளர்களுக்கான வலைகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர்தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கில் பல் வேறுவிதமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள இந்தியா திட்டமிட்டுள்ளது.

அதேபோல இந்தியாவின் நிதியுதவியில் பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் என்றார்.

இதன்போது 40 பயனாளர்களுக்கும் வலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள், வடமராட்சி வடக்குப் பிரதேசச் செயலக அதிகாரிகள் வடக்கு மாகாண கடற்றொழில் பிரதிநிதிகளான அ.அன்னராசா, நா.வர்ண குலசிங்கம் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ம-7,60)

## பயங்கரவாதச்...

அமோர்,

நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கட்டுப்பாட்டுச் சட்டங்களை இரத்துச் செய்வதன் மூலம் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், மாற்றுத் திறனாளி வாக்காளர்களுக்கான அணுகலை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதேவேளை, வெளிப்படைத்தன்மை மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மூலம் ஜனநாயகம் செழித்து வளர்கிறது என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.01.17 — சீட்டிழுப்பு இலக்கம் 5719 — Q 7 0 3 6 6 4
அத சம்பத — Q 3 6 6 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0294

தன நிதானய — திகதி - 2025.01.17 — சீட்டிழுப்பு இலக்கம் - 1749 — O 17 26 47 56 O — Double Chance 87430

மெகா பவர் — திகதி 17/01/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2067 — Y 04 13 28 59 69

லக்கி 7 VIP — திகதி 2025.01.17 — சீட்டிழுப்பு இலக்கம் 545 — V 2 1 4 5 1 3 V

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3961 — சீட்டிழுப்பு திகதி 17.01.2025 — M 28 46 47 66 — M

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.01.17 — சீட்டிழுப்பு இலக்கம் 1028 — கன்னி 04 07 26 48 கன்னி — 19706 — 32

உத்தியோகபூர்வ முடிவுகள் — 17.01.2025 — 427 — S 9 0 6 9 3 1 — 51666 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,313,670.80 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2693 — சீட்டிழுப்பு திகதி 2025.01.17 — தினம் வெள்ளிக்கிழமை — 02 40 54 72 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,485,994.40

சனிதா — திகதி 17.01.2025 — வெற்றி வாரம் 4854 — 15 37 68 72 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,123,569.60 — 71020

சசிரி — 602 — 17.01.2025 — வெள்ளிக்கிழமை — 07 10 47 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4405 — சீட்டிழுப்பு திகதி 17.01.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 04 08 32 56 மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,033,932.80 — 249395

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Z 12 22 31 42 53 — 1869 — 17.01.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.562,191,973.00

அட கோட்டிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2519 — சீட்டிழுப்பு திகதி 2025.01.17 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,579,944.80 — 12 29 67 73 E — 754323


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# Jeya Catering



சகல விதமான அசைவம், மரக்கறி உணவுகளையும் Order க்கு பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் அலுவலகத்தில் நடைபெறும் மாதாந்த சந்திப்புகள், தோட்டத் தொழில் செய்வோர், கட்டட வேலை செய்பவர்கள் என அனைவருக்கும் வீட்டில் தயாரித்து உணவுகள் தரப்படும். (752)

**076 091 3868, 077 328 8899**

## வேலைக்கு ஆள் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் கதைக்கப்படும். (C-2069)

**077 428 6976**

## நெல் அறுவடையாளர்களுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **நெல் சூடடிக்கும் இயந்திரம்** எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மணித்தியாலத்திற்கு 2 தொன் நெற்கதிர் அடிக்கக்கூடியதும் டிராக்டரில் பொருத்தி இயக்கக் கூடியதுமானது.

V2 "நாங்கள் உங்களோடு"



**ஆர்க்.என்.கம்பனி** (3051)

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

## வேலையாட்கள் தேவை

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் (Accountant) (பெண்) தேவை.

இடம் : யாழ்ப்பாணம்

தொ.இல : 077 158 0268, 076 889 1308, 077 839 3974

அத்துடன் கொழும்பில் பணி புரிவதற்கு டிரைவர் (Driver) (ஆண்) மட்டும் தேவை. அத்துடன் கணக்காளர் (ஆண், பெண் இருபாலாரும்) (754)

## GROUP CLASSES

**தரம் 6 - 11**

**ஆங்கில, தமிழ் மொழி மூல வகுப்புகள்**

- குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள்
- வாராந்த, மாதாந்த பயிற்சிப் பரீட்சைகள்
- சிரேஷ்ட, அனுபவமிக்க ஆசிரியர் குழாம்
- விரும்பிய பாடத்தெரிவு

(C-2075)

**ஆரம்பம் : 18.01.2025 சனிக்கிழமை**

தரம் 6,7,8 - 10.00 am
தரம் 9,10,11 - 6.00 am

**NEWTON, NALLUR**
TCT Supermarket அருகில்
**077 792 3653**

## காணி விற்பனைக்குண்டு

அச்சுவேலி சன்னதி றோட் வீரபத்திரர் கோவிலடி 6 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

**077 411 8851**
**076 882 8694** (3052)

## காணி விற்பனைக்கு

**வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார் கோவிலுக்கும் வேம்படிச் சந்திக்குமிடையே 4 பரப்பு 13 குழி அளவுடைய காணி விற்பனைக்குண்டு.**

- பிரதான வீதியூடாகவும், காட்டுவளவு வீதியினூடாகவும் இரு வழிப் பாதை உள்ளது.
- 20 காய்க்கும் தென்னை மரங்கள் உள்ளன.
- தேவைப்படின் இரண்டாகப் பிரித்தும் வழங்கப்படும்.
- தொடர்பு கொள்ளும் நேரம் : மாலை 5 மணியிலிருந்து இரவு 7 மணி வரை

தொடர்புகளுக்கு : (3043)

**077 501 7357**

## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு (C-2072)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்திக்கு அருகில் இயங்கும் மருத்துவ நிலையத்திற்கு வேலையாட்கள் (பெண் பிள்ளைகள்) தேவை. வேலை நேரம் : 4.30 - 7.30Pm (753)

**077 329 4210**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 228/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg ரவை | - 285/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 399/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg சர்க்கரை | - 260/= | |
| 1Kg கடலை | - 475/= | |
| 1Kg பயறு | - 550/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 640/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= | |
| 1Kg சம்பா(உள்நாடு) | - 240/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு No.1 | - 760/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2599/= | ~~3000~~/= |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 975/= | ~~1050~~/= |



400g Anchor 990/= ~~1050/=~~

1 டசின் தீப்பெட்டி 160/= ~~240/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (755)

Happy Supermarket 0777 8080 30

## XMARD

கோப்பாய், மருதனார்மட கிளைகளில் இதே விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3325~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~695~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
074 2327 545

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
074 1011 345 (C-2073)


# மரண அறிவித்தல்

## சண்முகநாதன் திபாஹரன்

### பிரபல வயலின் வித்துவான்

(போதனாசிரியர், கட்புல அரகேற்ற கலைகள் பல்கலைக்கழகம், கொழும்பு)



தோற்றம் 12.03.1973 மறைவு 15.01.2025

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல வயலின் வித்துவான் சண்முகநாதன் திபாஹரன் புதன்கிழமை 15.01.2025 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வரணி வேலுப்பிள்ளை சண்முகநாதன் - சுந்தரராணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் சின்னத்துரை நடராசா (இணுவில்) (ஓய்வுநிலை காணி உத்தியோகத்தர், மாந்தை கிழக்கு, துணுக்காய்) - பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் கவிதா (முன்னாள் ஆசிரியை - பாண்டியன் குளம் மகா வித்தியாலயம் மல்லாவி, ஹோமாகம கலகெதர முஸ்லீம் வித்தியாலயம் - பாதுக்க, தற்போதைய ஆசிரியர் நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும் தாமோதரன் (மாணவன் - St.Thomas College - Mt Lavinia), கௌரிசங்கரன் (மாணவன் - St.Thomas College - Mt Lavinia) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹரிஹரன் (கண்ணன்), அங்கவை (அவுஸ்ரேலியா), சங்கவை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அரவிந்தன், சங்கீதா (பிரான்ஸ்), கிரிதரன், சிவதட்சணி, ஜீவராஜ், சிறிசுதன், துஷ்யந்தன், அர்ச்சனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் நாகபூஷணி ஆகியோரின் மருமகனும், கணேசநாதன் (கனடா) காலஞ்சென்ற சிவநாதன் (கனடா) காலஞ்சென்ற கணேஷ்வரி மற்றும் தவமலர், சிவமலர் ஆகியோரின் பெறாமகனும் பிராமி, லதாமி ஆகியோரின் சித்தப்பாவும் ஹரிணி, அனுஷ்கா, அபிநிஷா, கவிநயன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஹர்ஷிணி, சபரிஹரிஷ் மற்றும் சாம்பவி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.01.2025 மற்றும் 17.01.2025 ஆகிய தினங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 18.01.2025 (சனிக்கிழமை) அன்று அவரது இல்லத்திற்கு (மஞ்சத்தடி, இணுவில்) எடுத்து செல்லப்பட்டு 19.01.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல் : ஹரிஹரன் (சகோதரன்)*
077 736 0079

(3041)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org